# பதிப்புரை

***பல்***வகை வண்ணங்களைக் கொண்ட வண்ணத்துப் பூச்சி பார்வைக்கு மிக அழகாக உள்ளது. பல்வகை பண்பாடுகளைப் பின்பற்றிவரும் மக்கள் இனங்கள் ஒருசேர வாழ்வதைக் காணும்போது மகிழ்ச்சி தருகிறது. வரலாற்றுத் தொடக்க காலம் முதல் இக்காலம் வரை பல்வேறு இனமக்கள் தத்தமக்குரிய பண்பாட்டைத் தத்தமக்குரிய உணவு, உடை, உறையுள், மொழி, நாகரிகம், நாடு ஆகியவற்றைப் போற்றிப் பாதுகாப்பதன் மூலம் அடுத்துவரும் தலைமுறையினர்க்கு எடுத்துச் செல்கின்றனர்.

இருபதாம் நூற்றாண்டு மிக வேகமாக வளர்ந்துவரும் அறிவியல் நூற்றாண்டு. மனிதன் எல்லா எல்லைகளையும் மீறிக்கொண்டு வளர்ந்து வருகிறான். தனக்குள்ள பண்பாட்டையே மறந்து வருகிறான். நாடு என்கிற எல்லையை மீறி எல்லோரும் எல்லா நாடுகளிலும் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. இன்று எந்த எசுக்கிமோக்களும் இக் குழுவில் வாழ்வதில்லை. தனிமனித இனத்தின் குறியாகத் திகழும் உணவு, உடை, உறையுள் எல்லாவற்றிலும் உலக முழுவதும் ஒத்த சீரான போக்கு வளர்ந்துள்ளது. அந்தந்த இனத்திற்குரிய பண்பாடு மட்டும் ஒரு சில இடங்களில் மீறப்படாமல் உள்ளது. மொழியைப்பற்றிய நிலையும் இதுவே. வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தம் சிறார்களுக்குத் தமிழைக் கற்பிப்பதில்லை. தமிழ் அறியாத் தமிழர்கள் தரணியெங்கும் உருவாகி வருகிறார்கள்.

இச் சூழலில் ஒரு மொழியைக் காப்பாற்றி வருகிற தலைமுறையினர்க்கு அளிப்பது என்பதே பெருஞ்செயலாக உள்ளது. மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட முன்னைப் பழையமொழியாம் தமிழ், தமிழ் நாட்டிலேயே பல தமிழர்

> “அளக்க லாகா அளவும் பொருளும்
> துளக்க லாகா நிலையும் தோற்றமும்
> வறப்பினும் வளம்தரும் வண்மையும் மலைக்கே”

என்பது ***நன்னூற் பாயிரம்!***

*“மலை என்னும் சொல்லுக்குப் பொருள் வலிமையினை யுடையது. ‘மல்’ என்றால் வலிமை. மலைகள் எல்லாம் பெரும்பாலும் வலிவான கருங்கல்லால் ஆக்கப்பட்டிருக்கின்றன.” என்பது அடிகளார் தரும் மலை விளக்கம் (சிறுவர்க்கான செந்தமிழ்-4)*

“நீடிருங் குன்றம் நிழல்காலும் மண்டிலத்துக்
கோடு கோடாய்த் தோன்றும்”

*என்பது **சிலம்பு.** மலையைக் காட்டும் - முற்றாக அதே அளவில் அதே நிலையில் - படம் பிடித்துக் காட்டும் - ஆடியும் உண்டோ? அதே நிலைதான், அடிகளாரின் இவ் வரலாற்று நிலையும்!*

*மலையின் வரலாறு, இயற்கையோடு இயைந்த தன்றோ! இத் தகுமலையின் வரலாறும் இயற்கையோடு இயைந்து செல்லும் தலைப்புகளைக் கொண்டமை பார்த்த அளவாற் புலப்படும்.*

*ஒன்பான் பகுதிகளைக் கொண்டது இவ் வரலாறு. முதற்பகுதி **‘குயிலிசை’;** அடிகளார் தம் வளமாளிகையின் சூழலில் வள்ளலார் பாடலை இசைத்ததும், அவர்தம் தவமகளார் தூண்டலால் தனித்தமிழ் இயக்கம் கண்டதும் இப் பகுதி ஆகும். அடிகளார் இசை, மகளார் இசை, தனித் தமிழ் இசை, வள்ளலார் இசை எல்லாமும், குயிலிசை தழுவல் பொதுமைய.*

***‘பள்ளியெழுச்சி’** என்பது விழிப்பு - பிறப்பு - ஒலிப்பு - படிப்பு இன்னவெல்லாம் தழுவிய வரலாற்றினது. மூன்றாம் தலைப்பாகிய **‘தமிழ்த்தேனீ’** என்பது பள்ளிப் படிப்பை விடுத்த அடிகளார் தனிப்படிப்பும் பொத்தக வணிகர் நாராயணசாமியார் வழியே கற்ற கல்வியுமாம்! “கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைத்த” தகையது அது!*

***‘மணமலர்’** என்பது காதல் மணமும், கல்வி மணமும் பரவிய நிலையாகும்.*

*ஐந்தாவதாகிய **‘பூஞ்சோலை’** அடிகளார் கிறித்தவக் கல்லூரிப் பேராசிரியராகக் கடனாற்றிய காலத்துச் செய்திகளாகும். மாணவர் வளாகம் என்பது பூஞ்சோலை வளாகம்தானே! அவரினும் இளவள மலர் உண்டோ?*

அடிகளார் கல்லூரிப் பணியை விடுத்துப் பொது நிலைக்கழக நிறுவனராய் - ஆசிரியராய் - அடிகளாராய்-த் தென்னகமும், வடவகமும், ஈழவகமும் உலாவந்த இனிய செய்திகள் **'தென்றல் உலா'**

அடிகளார் இயற்றிய நூல்கள் எத்தகைய இனிமையும் வளமையும் வாய்ந்தவை! அவை **'தேனருவி'** யல்லவோ! "தேனருவி வழியும் மூலையில் நாலைந்து தென்னமர உயரத்தில் வட்டமான ஒரு பெருந்தேனடை இருந்தது. அவ்வளவு பெரிய தேன் அடையை யாம் வேறு எங்குமே கண்டதில்லை. அதன் குறுக்களவு சிறிது ஏறக்குறையப் பத்து அடி இருக்கும். அதன் நிறஞ்சிறு சிவப்பாய் இருந்தமையால் அது, காலையில் எழும் பகலவன் வடிவை ஒத்திருந்தது. அத் தேனடையின் பக்கத்துள்ள மூலையில் இருந்து அருவி நீர் வீழ்தல்பற்றியே அதனைத் தேனருவி என வழங்குகின்றனர் என்றும், எக்காலத்துமே அத்தேனடை அங்கு இருக்கும் என்றும் எம்முடன் வந்தார் சொல்லக்கேட்டேம்" என்பது குற்றாலமலையில் அடிகளார் கண்ட தேனருவிக் காட்சி! (சிறுவர்க்கான செந்தமிழ் 10) பழகப் பழகப் பாலும் புளிக்கும் பன்னீராண்டானால் தேனும் புளிக்கும் என்பது பழமொழி! அடிகளார் நூல் என்றும் 'உவட்டாமல் இனிக்கும்' தேனருவியன்றோ!

எட்டாம் பகதி **உதிர் மலர்!** அடிகளார் புகழுருவாகிய பகுதி அது.

நிறைவில் உள்ள **'புகழ் மாலை'** அடிகளாரைக் குறித்த உரையும் பாட்டுமாம் நறுமலர்த் தொடையலாய் அமைந்தது. நினைவகங்களும் புகழ் மாலையைச் சேர்ந்தவையே!

தமிழ் உணர்வுக்கு - தமிழின உணர்வுக்கு அடிகளார் வரலாறு வைப்பகம்! வளநிலம்! அவர் நூல்களைக் கற்றால் பிழையின்றிப் பேசவும் எழுதவும் வாய்க்கும்.

"யான் தமிழில் எழுதும் ஒவ்வொரு சொல்லையும் சொற்றொடரையும் நீங்கள் செவ்வையாக உன்னித்து வந்தால் தமிழிற் பிழையின்றிப் பேசவும் எழுதவும் ஆற்றல் பெறுவீர்கள்" என்பது அடிகளார் எழுத்து (மறைமலை அடிகள் கடிதங்கள் பக்.1)

இவ்வினிய வரலாற்றை எழுதத் தூண்டியவர்கள் கழக ஆட்சியாளர் திருமலி **இரா. முத்துக்குமாரசாமி** அவர்கள். நினைக்கவும் சொல்லவும் எழுதவும் இனிமை மல்கும்

சுருங்கிய வகையில் ஆராய்ச்சித் திறத்தைக் காட்டியவை இம்முப் பகுதிகளுமாகும்.

இப்பொழிவு ஆற்றவும், நூலாகித் தமிழ்வளம் செய்யவும் கிட்டிய வாய்ப்புப் பெரிது. அதற்கு அடிப்படையாம் அறக் கட்டளை வைத்து, ஆய்வைத் துலங்கச் செய்பவர், உரையும் பாட்டும் உரைப்பாட்டும் திரைக்கலையும் வல்லவரும், தமிழாய்ந்த தமிழ்த்தலைவனே தமிழ்நாட்டை ஆளவேண்டும் என்னும் பாவேந்தர் விழைவை நிறைவு செய்பவரும் ஆகிய முதல்வர் கலைஞர் அவர்கள் ஆவர்.

தாம் பெற்ற இராசராசன் விருதுத் தொகை ஓரிலக்கத்தையும் தம்மைக் குடல் விளக்கம் செய்த பெற்றோர் முத்துவேலர் அஞ்சுகத்தம்மையர் பெயரில் ஆய்வு அறக்கட்டளை ஆக்கிய அப்பேறே, இப்பொழிவுக்கும் நூலுக்கும் வாய்த்த வான் சிறப்பாகும். மலையடிகளாரின் "சமய நோக்கு" என்னும் பொழிவு செய்யும் பேறு பெற்றேன், அப்பொழிவும் ஆய்வுப் பொழிவே. மறை மலையடிகளாரின் ஆராய்ச்சித் திறன் பற்றிய ஆய்வுப் பொழிவே. அப்பொழிவும் இணைக்கப் பெற்றுள்ளது.

"தனித்தமிழ்த் தந்தை" மறைமலையடிகளாரின் ஆராய்ச்சித் திறன் குவித்து எளியேன் பொழிவை நூலாக்கி வழங்க விழைந்த தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கும் ஆட்சிக் குழுவுக்கும், அறக்கட்டளைக் குழுவுக்கும் பெங்களூர்த் தமிழ்ச் சங்கப் பெருமக்களுக்கும் நன்றியுடையேன்.

அறக்கட்டளை அடங்கிக் கிடத்தலால் ஆகும் தமிழ்ப் பயன் என்ன? அதனை நூலாக்கி உலாக் கொள்ள வைக்கும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கும், அதன் அமைச்சர் பெருமகனார் முனைவர் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியன்.

வாழிய நலனே வாழிய நிலனே!

**அன்புடன்,**

**இரா. இளங்குமரன்**

